வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 02.01.2025 வியாழக்கிழமை இதழ் : 02 பக்கங்கள் : 12






## வடக்கு மாகாண சபை இல்லாதமை சிறப்பே!

### யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜன. 02

வடக்கு மாகாண சபை இல்லாமல் இருப்பது சிறப்பு போல் இருக்கின்றது. மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் சும்மா கத்திக்கொண்டிருப்பதைப்போல மாகாணசபை இருந்தாலும் அங்கும் கத்திக்கொண்டு தான் இருப்பார்கள். இப்போது அதிகாரிகளால் மாகாண சபை சிறப்பாக நடத்தப்படுகின்றது என 11

### 'கிளீன்' சிறிலங்கா போன்று

# இனப்பிரச்னையைத் தீர்க்க 'கிளீன்' சிந்தனை வேண்டும்!

### சிறிதரன் எம்.பி. வலியுறுத்து



கிளிநொச்சி, ஜனவரி 02

**இனப்பிரச்னையை தீர்க்க கிளீன் சிறிலங்கா போன்ற கிளீன் சிந்தனையைக் கொண்டுவரவேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.**

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மலர்ந்திருக்கும் புது வருடம் இன ஒற்றுமையுடன் கூடிய இனப்பிரச்னையை தீர்த்து வைக்கும் அவர்களின் இலக்கை அடையும் புது வருடமாக அமையும் என்ற எதிர்பார்ப்போடு காலடி எடுத்து வைக்கின்றோம். இலங்கை நாட்டில் வருமானம் தரக்கூடிய பொருளாதாரம் எவையும் இல்லை. பொருந் தோட்ட பொருளாதாரமும் 11

## 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி அநுர!

கொழும்பு, ஜன. 02

அரசாங்கத்தினால் நடைமுறைப் படுத்தப்படவுள்ள 'கிளீன் சிறிலங்கா' வேலைத்திட்டம் மலர்ந்துள்ள புதுவருடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது 'கிளீன் சிறிலங்கா' இணையத்தளம் ஒன்றும் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டது.

'கிளீன் சிறிலங்கா' திட்டத்தை 11




## நண்பர்கள் யார் எதிரிகள் யார் என அறகலய போராட்டம் காண்பித்தது!

### மனம் திறக்கிறார் சவேந்திர சில்வா



கொழும்பு, ஜன. 02

2022ஆம் ஆண்டு நடைபெற்ற அறகலய போராட்டம் எனது உண்மையான நண்பர்கள் மற்றும் எதிரிகள் யார் என்பதை வெளிப் படுத்தியது என ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற 11

## மகிந்தவை அரசியல் ரீதியில் முடக்குவதற்கு அரசு சூழ்ச்சி!

### சாகர காரியவசம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 02

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அரசியலில் இருந்து ஓய்வு பெற வைப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது. ஏனெனில் மகிந்தவுக்கு ஆட்சியாளர்கள் அஞ்சுகின்றனர் என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்நாட்டில் அதிக பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள தலைவர்தான் மகிந்த ராஜபக்ஷ. அவருக்கு தேவையான பாதுகாப்பை வழங்காமல், அவரை வீட்டுக் குள்ளேயே 11

## ஐ.ம.சக்தியின் தலைமை மாற்றமில்லை

கொழும்பு, ஜன. 02

ஐக்கிய மக்கள் சக்தி மறுசீரமைப்பு நடவடிக்கை ஜனவரி முதல் வாரத்தில் ஆரம்பமாகும் எனவும், கட்சித் தலைமைப்பதவியில் மாற்றம் வராது எனவும் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய 11

## மக்கள் கனவுகளை நனவாக்குவதற்கு மேலும் வீரியத்துடன் செயல்படுவோம்

### புத்தாண்டு வாழ்த்தில் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 02

தவறவிட்ட சாதனைகளை மீண்டும் நாட்டுக்கு வென்று கொடுக்கவும் மக்களின் கனவுகளை நனவாக்கவும், புத்தாண்டில் மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட உள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள் ளார்.

புத்தாண்டை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கிராமிய வறுமையை ஒழித்தல், 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டம் மற்றும் டிஜிற்றல் பொருளா தாரத்தை கட்டியெழுப்புதல் ஆகியவை நாட்டின் 11

## முக்கிய அரசியல்வாதிகள் கைதாகுவதற்கு சாத்தியம்?

கொழும்பு, ஜன. 02

பல்வேறு மோசடி மற்றும் ஊழல் வழக்குகளில் தொடர்புடைய ஒரு முக்கிய அரசியல் பிரமுகரின் செல்வாக்கு மிக்க மனைவி உட்பட ஐந்து அரசியல்வாதிகள் இந்த ஆண்டு தொடக்கத்தில் கைது செய்யப்படுவார்கள் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நம்பகமான அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று இது குறித்து செய்தி வெளியிட்டுள்ளது. 11

## மீனவர்கள் பிரச்னை குறித்து ஜனாதிபதியுடன் பேச திட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 02

வட பகுதி மீனவர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை ஜனவரி மாத இறுதியில் சந்தித்துப் பேசுவதற்கு கடற்றொழிலாளர் அமைப்புகள் தீர்மானித்துள்ளன.

அதேவேளையில் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரையும் இவ்வமைப்புகள் சந்தித்துப் பேசவுள்ளன. 11

## யாழில் சாப்பிட்ட பின் உறங்கிய இளம் குடும்பப் பெண் மரணம்!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜன. 02

யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று தூக்கத்திலேயே உயிரிழந்துள்ளார். அரியாலைப் பகுதியைச் சேர்ந்த பிரபாகரன் சுவேக்கா (வயது 30) என்ற இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் நேற்றுக் காலை 9 மணியளவில் உணவு அருந்திவிட்டு படுத்துறங்கியுள்ளார். பின்னர் குறித்த பெண்ணின் தாயார் மதிய உணவுக்காக அவரை எழுப்பியவேளை அசைவற்று காணப்பட்டார்.

இந்நிலையில் அவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 ஆண்டுகள் வசித்த காணியிலிருந்து தமிழ்க் குடும்பங்கள் வெளியேற்றம்!

## தெங்கு பயிர்ச் செய்கை சபை நடவடிக்கை

கிளிநொச்சி, ஜன.02

கிளிநொச்சியில் 50 ஆண்டு காலமாக வசித்த காணிகளில் இருந்து தமிழ் மக்கள் தெங்கு பயிர்ச் செய்கை சபையால் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

குறித்த காணிகள் தெங்கு பயிர்ச் செய்கை சபைக்கு சொந்தமானவை என்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்று வழங்கிய கட்டளையையடுத்தே அங்கு வசித்தவர்களை வெளியேற்றும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சோரன்பற்று - கரந்தாய் பகுதியில் சுமார் 160 ஏக்கர் காணி 104 குடும்பங்களுக்குச் சொந்தமாக இருந்தன. 1976 ஆம் ஆண்டு காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் மூன்று கட்டங்களாக குறித்த காணிகள் மக்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டிருந்தன. இங்கு வசித்த பலரின் காணி தொடர்பான ஆவணங்கள் போர்க் காலத்தில் அழிவுற்றிருந்தன. இந்த நிலையில் 2006 ஆம் ஆண்டு சில குடும்பங்களுக்கு மீளவும் ஆவணங்கள் வழங்கப்பட்டிருந்தன.


இந்த நிலையில் குறித்த காணிகள் தமக்கு சொந்தமானவை என தெரிவித்து தெங்கு பயிர்ச் செய்கை சபை வழக்கு தொடர்ந்திருந்தது. கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் குறித்த காணிகள் தெங்கு பயிர்ச் செய்கை சபைக்கு உரியவை என்று மன்று அண்மையில் தீர்ப்பளித்தது.

குறித்த தீர்ப்புக்கு எதிராக பொதுமக்களால் வவுனியா மேல் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டதை தொடர்ந்து, குறித்த காணிகளில் இருந்து அந்தக் குடும்பங்களை வெளியேற்றும் நடவடிக்கைகளை தெங்கு பயிர்ச் செய்கை சபை ஆரம்பித்துள்ளது.

எனினும், முன்னதாக கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றால் இதே பகுதியைச் சேர்ந்த சில குடும்பங்களுக்கு காணி உரித்துடையது என்று தீர்ப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(எ)

# சங்கானையில் வீட்டின் மேல் முறிந்து விழுந்த வேப்பமரம்



யாழ்ப்பாணம், ஜன.02

யாழில் மழையுடன் கடும் காற்று வீசிய நிலையில் வீட்டின் மீது வேப்ப மரம் ஒன்று முறிந்து விழுந்தது.

சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஜே - 166 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள வீடு ஒன்றின் மீதே வேப்பமரம் முறிந்து விழுந்ததால் வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி. என். சூரிய ராஜா தெரிவித்தார்.

மழையுடன் வீசிய காற்று காரணமாக குறித்த அனர்த்தம் இடம்பெற்றது. இருப்பினும், உயிர்ச் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை - என்றார்.

(எ-05)

# இராணுவ பேருந்து - ஓட்டோ ஏ - 9 வீதியில் மோதி விபத்து

## படுகாயமடைந்த சாரதி மருத்துவமனையில்



வவுனியா, ஜன.02

வவுனியா, ஏ - 9 வீதியில் இராணுவத்தின் பேருந்து மற்றும் ஓட்டோ என்பன மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்ததாக வவுனியா போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

ஏ - 9 வீதி ஊடாக அநுராதபுரம் நோக்கிப் பயணித்த இராணுவத்தினரின் பேருந்து ஒன்று மூன்று முறிப்பு பகுதியில் பயணித்த தனியார் பேருந்து ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிர்த் திசையில் வவுனியா நோக்கி வந்த ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ஓட்டோ சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(எ-10)

# யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் புதிய ஆண்டு வேலைகள் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜன.02

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் 2025ஆம் ஆண்டுக்கான புதிய வேலை ஆரம்ப நாளில் உறுதிமொழி எடுக்கும் நிகழ்வு நேற்றுக் காலை மாவட்ட செயலக முன்றலில் நடைபெற்றது.

இதன்போது, மாவட்ட செயலக முன்றலில் தேசிய கொடியை அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் ஏற்றி வைத்தார். பின்பு தேசிய கீதம் இசைக்கப்பட்டது. தொடர்ந்து அரச உயர் அதிகாரிகள், பதவி நிலை உத்தியோகத்தர்கள், அலுவலர்கள் இணைந்து புதிய வேலைகளை ஆரம்பிக்கும் நாளான நேற்று சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.

இதன்பின்னர் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் ஒன்று கூடிய அரச அதிகாரிகள், வருட ஆரம்ப நாள் தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஆற்றிய உரையை காணொலி வாயிலாக கேட்டறிந்தனர்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். சிறீமோகனன், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எஸ். சுரேந்திரன், மாவட்ட செயலக பதவி நிலை உதவிப் பணிப்பாளர்கள், பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(எ-05)

# கிளாலியில் இலவச மருத்துவ முகாம்

கிளிநொச்சி, ஜன. 02

பளை - பச்சிலைப்பள்ளி மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, பாராளுமன்ற உறுப்பினரான றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தியின் ஒழுங்குபடுத்தலில் கிளாலி பகுதி மக்களுக்கு இலவச மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் வினோதனின் நேரடி வழிப்படுத்தலில் இந்த இலவச மருத்துவ முகாம் செயல்படுத்தப்பட்டது.

இந்த மருத்துவ முகாமில் பல மக்கள் மருத்துவ சேவையை பெற்றுக்கொண்டதை அவதானிக்க முடிந்தது. அத்துடன் இவ்வாறான மருத்துவ முகாம்களை தொடர்ந்து நடத்துவதற்கு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பா ளர் சம்மதம் தெரிவித்துள்ளார். (எ-05)

# காணிகளை அபகரிக்காதே

## தொல்பொருள் திணைக்களத்துக்கு எதிராக புத்தாண்டு தினத்தன்று மக்கள் போராட்டம்



திருகோணமலை, ஜன. 02

திருகோணமலை - குச்சவெளி பிரதேசத்தில் 50 வருடங்கள் பழமை வாய்ந்த நெல் களஞ்சியசாலை மற்றும் அதன் காணிகளையும் தொல்பொருள் திணைக்களம் சுவீகரிக்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து குச்சவெளி மக்கள் நேற்றுக் காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யுத்த காலத்தின் போது பழைய சந்தை பிரதேசத்தில் பொலிஸார் நிலை நிறுத்தப்பட்டிருந்ததாகவும் அந்த இடத்திலிருந்து பொலிஸார் அகற்றப்பட்ட பின்னர், முழுக் காணியும் தொல்பொருள் பிரதேசம் எனப் பெயரிடப்பட்டுள்ளதாகவும், அதனை தம்மிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்தே மக்கள் போராட்டத்திலும் வீதி மறியலில் ஈடுபட்டனர்.

குச்சவெளி பிரதேச செயலகத்துக்கு முன்பாக நுழைவாயிலில் நின்று மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த குச்சவெளி உதவிப் பிரதேச செயலாளரிடம், பொதுமக்கள் கோரிக்கை மனு ஒன்றையும் கையளித்தனர்.

# மன்மோகன் சிங்குக்கு செல்வம் எம். பி. அஞ்சலி



கொழும்பு, ஜன. 02

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், அந்தக் கட்சியின் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු
02.01.2025 வியாழக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மாற்றுக் கோஷத்தின் தோல்வி

தமிழ் அரசுக் கட்சிக்குள் நடைபெற்றுவரும் விடயங்கள் தொடர்பில் கேள்வி எழுப்புவதற்கு அக்கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு உரித்துண்டு. கட்சியின் போக்கு தொடர்பில் அவர்கள் கவலை வெளியிட்டால் அதிருப்தியடைந்தால் அது நியாயமானது. ஆனால் தமிழ் அரசுக் கட்சியால் பயனில்லை என்று விமர்சித்துவரும், அதற்கு மாற்றான தலைமைத்துவம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கூறிவந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் (முன்னணி) தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ் அரசுக் கட்சி பற்றிக் கவலைப்படுவதும் அதனை தவிர்த்து தமிழ் மக்கள் சிந்திக்க முடியாதென்று கூறுவதை எவ்வாறு புரிந்து கொள்வது?

2010இல் சம்பந்தனது தலைமையின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறினார். அதன் பின்னரான கடந்த பதினைந்து வருடகாலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றான தலைமையொன்றாக தங்களை நிரூபிக்கும் முயற்சியிலேயே பொன்னம்பலம் முயற்சித்துவந்தமை இரகசியமானதல்ல. பிற்காலத்தில் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரை ஒன்றிணைத்து மாற்றுத் தலைமை ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியிலும் பலர் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான தலைமையொன்றை ஏற்படுத்தவேண்டும் என்பதில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மட்டுமல்லாது சிவில் சமூக நபர்கள், கருத்துருவாக்கிகள், பல்கலைக்கழக சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் பலவாறான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ் மக்கள் பேரவை உருவாகியது. தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகித்த பலர் சம்பந்தன் மற்றும் சுமந்திரனின் அரசியல் தீர்மானங்களை, செயல்பாடுகளை எதிர்த்தவர்கள். ஆனால் அனைத்து முயற்சிகளுமே தோல்வியில்தான் முடிவுற்றது.

ஆனாலும் சற்றும் மனம்தளராத விக்கிரமாதித்தன் போன்று, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தங்களை தமிழ் தேசிய முன்னணி என்னும் பெயரில் மாற்றுத் தலைமையாக நிறுவும் முயற்சியை தொடர்ந்தது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போதும் தமிழ் அரசுக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதே முன்னணியின் பிரதான அரசியலாக இருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் திடீரென்று பொன்னம்பலம் தமிழ் அரசுக் கட்சியின் எதிர்காலம் தொடர்பில் கவலைப்படுவதானது, மாற்றுத் தலைமையொன்றை ஏற்படுத்தும் பதினைந்து வருட கால முயற்சியின் தோல்வியா? அல்லது வடக்கு மாகாண தமிழ் மக்கள், குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் பெரும்பான்மையாக தேசிய மக்கள் சக்தியை நோக்கி அணிதிரண்டிருப்பதால் பொன்னம்பலம் கலக்கமடைந்திருக்கின்றாரா?

தமிழ் அரசு கட்சி பிழையென்றால் அதனை அரசியல் அரங்கிலிருந்து அகற்றும் முயற்சியைத்தான் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முனைப்புக் காட்ட வேண்டும். அவ்வாறில்லாது, தமிழரசு கட்சியின் முக்கியத்துவம் பற்றி பேசுவதான அவரது தோல்வியை அவரே ஒப்புக் கொள்ளும் ஒப்புதல் வாக்குமூலமாகும். அடிப்படையில் தமிழ் அரசுக் கட்சியும் அதன் வீழ்சியை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கின்றது. ஆனாலும் தமிழ் அரசுக் கட்சி இன்றும் ஓர் அரசியல் தரப்பாக காட்சியளிப்பதற்கு ஒரேயொரு காரணம்தான் உண்டு - அதாவது, தமிழ் அரசுக் கட்சிக்கு மாற்றான தரப்புகளாக தங்களை காண்பிக்க முயற்சித்த கட்சிகளின் இயலாமையால்தான், இப்போதும் தமிழ் அரசுக் கட்சி ஒரு தெரிவாக இருக்கின்றது. அந்த வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டுமல்ல ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் தோல்வியடைந்துவிட்டது.

# புதிய அரசியலமைப்பை உருவாக்க அரிய வாய்ப்பு

## பொறுப்பை ஜனாதிபதி நிறைவேற்றினால் பொன்னெழுத்துக்களால் பதியப்படுவார்

### நீதியான சமுதாயத்திற்கான தேசிய இயக்கம்




புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக முன் னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு அப்போதைய எதிர்க்கட்சி தடையாக செயற்பட்டு பாரியதொரு தவறிழைத்தமை இன்றும் கவலைக்குரியது. புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கு சிறந்த அரிய சந்தர்ப்பம் அரசாங்கத்துக்கு கிடைத்துள்ளது. புதிய யாப்பினை உருவாக்கும் பொறுப்பை ஜனா திபதி நிறைவேற்றினால் வரலாற்றில் அவர் பொன் எழுத்துக்களால் பதியப்படுவார் என நீதியான சமுதாயத்துக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கம், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு நிறைவடைந்ததன் பின்னர் அரசியலமைப்பு திருத்தத்தை மேற்கொள்ள அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இவ்விடயத்தில் முழுமையான ஆதரவளிப்போம். அத்துடன் ஆசிர்வாதமளிப்போம்.

காலஞ்சென்ற சோபித தேரர் நிறைவேற்றுத்துறை அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தார். புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கு மக்கள் விடுதலை முன்னணி முன்னிலையில் இருந்தவாறு ஒத்துழைப்பு வழங்கியது. தேசிய மக்கள் சக்தி தற்போது அதே நிலைப்பாட்டில் இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

நாட்டின் பொதுச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்காக முன்னெடுக்கப்படும் பணிகள் மற்றும் கருமங்களுக்கு சிவில் சமூகத்தினர் உட்பட ஒட்டுமொத்த மக்களும் ஒத்துழைப்பு வழங்குவது அத்தியாவசியமானது. முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவின் ஆட்சியில் ஒரு சிலரை மாத்திரம் உள்ளடக்கிய வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக முன்னெடுத்த நடவடிக்கைள் தோல்வியடைந்ததை கவனத்திற் கொள்ள வேண்டும்.

அதேபோல் 2000 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பல விடயங்களை உள்ளடக்கிய வகையில் அனைத்து அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் தயாரித்த சட்டமூல வரைவினை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. ஜனாதிபதி முறைமையில் அவரது பதவி காலம் நிறைவடையும் வரை , முடிவுறாத வகையில் செயற்படுவதற்குரிய ஏற்பாடுகள் காணப்பட்டமை அதற்கு பிரதான காரணியாகும்.

அச்சந்தர்ப்பத்தில் அந்த சட்டமூல வரைவை அப்போதைய எதிர்க்கட்சி பாராளுமன்றத்தில் தீக்கிரையாக்கியதையிட்டு இன்றும் கவலையடைகிறோம். அதன் பின்னர் எதிர்க்கட்சி எதிர்ப்பு தெரிவித்த சட்ட பிரிவை இரத்துச் செய்து சட்ட வரைவை திருத்தங்களுடன் நிறைவேற்றுவதற்கு அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க முயற்சித்த போது அதற்கும் அப்போதைய எதிர்க்கட்சி தடையாக செயற்பட்டமை பாரியதொரு தவறாகும்.


ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்த நாட்டின் நிறைவேற்றுத்துறை அதிகாரமிக்க இறுதி ஜனாதிபதி என்று ஜனாதிபதியை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியினர் குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது. நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் ஜனாதிபதி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை பெற்றுள்ளது.

ஆகவே புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதில் தடையேதும் தற்போது கிடையாது. புதிய அரசியலமைப்புக்கு எதிர்க்கட்சியிலும் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவளிப்பார்கள். ஆகவே புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கு பாராளுமன்றத்தில் ஆறில் ஐந்து (5/6) பெரும்பான்மை ஆதரவை பெற்றுக் கொள்வதற்கான இயலுமை காணப்படுகிறது.

இதற்கமைய இந்த நாட்டுக்கு மிக மோசமான அழிவு ஏற்படுவதற்கு காரணமாக அமைந்த நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்வதற்கு இந்த அரசாங்கத்துக்கு அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது.உரிய கால வரைபுக்குள் புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என்பது எமது அபிலாசையாகும்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான பொறுப்பை சிறந்த முறையில் நிறைவேற்றினால் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அரச தலைவர் என்ற ரீதியில் எதிர்காலத்தில் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுவார்.அதேபோல் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் இலங்கையின் நன்மைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாக கருதப்படும் - என்றுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். உடன் பிறந்தவர்களின் பிரச்னையை தீர்த்து வைப்பீர் கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். பயணங் களால் மகிழ்ச்சி தங்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**இடபம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். சிலர் உங் களைநம்பிபெரியபொறுப்புகளைஒப்படைப்பார்கள். விலகி நின்ற வர்கள் விரும்பி வருவார்கள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திட்டமிடாத செல வுகளும் பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த் தியமாக சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் கவனமுடன் செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**
குடும்பத்தில் ஆரோக்யமான விவாதங்கள் வந்து போகும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். வெளி யூர் பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. நல்லசெய்தி வரும்.

**சிம்மம்**
சந்தர்ப்ப சூழ்நிலையறிந்து செயல்படும் சாமர்த் தியத்தை கற்றுக் கொள்வீர்கள். பிள்ளைகளால் புகழ் கௌரவம் உயரும். உத்தியோகத்தில் சில தந்தி ரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கன்னி**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்ப டைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவி னர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர் கள். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
எதிர்ப்புகளையும் தாண்டிமுன்னேறுவீர்கள். வீடு வாகனப்பராமரிப்பு செலவுகள் அதிகரிக்கும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். உதவியை நாடுவீர்கள். நன்மை கிட்டும் நாள்.


**விருச்சிகம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். பிள்ளைகளால் சொந்த -பந்தங்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு**
மனக்குழப்பம் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். நேர்மறை எண்ணம் பிறக்கும்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உங்களுடைய பலம் எது பலவீனம் எது என்று நீங்கள் உணர்ந்து கொள்வது நல்லது. வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள்.

**கும்பம்**
மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப்பான் மையும் வந்து செல்லும். பண விஷயங்களில் சாக்கு போக்குகளை சொல்லி சமாளிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு.

**மீனம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள். உங் களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். கண் டும் காணாமல் இருந்தவர்கள் வலிய வந்து பேசு வார்கள். சிறப்பான நாள்.



2025ஆம் ஆண்டு புத்தாண்டை வரவேற்கும் முகமாக நல்லூர் கந்தசுவாமி கோவில் தேரடியில் நள்ளிரவு 12 மணிக்கு தீபங்கள் ஏற்றப்பட்டன.

(படங்கள்: - ஐ.சிவசாந்தன்)

# ‘கிளீன் சிறீலங்கா’ வேலைத்திட்டம் உறுதியுரையுடன் நேற்று ஆரம்பம்

வவுனியா, ஜன.02

தேசிய ரீதியில் இந்த ஆண்டு முதலாம் திகதி முதல் கிளீன் சிறீலங்கா வேலைத்திடம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்துக்கான உறுதியுரையை எடுத்துக் கொண்டனர்.

முன்னதாக மாவட்ட அரச அதிபர் பீ. ஏ. சரத்சந்திர தேசிய கொடியை ஏற்றி வைத்ததுடன், மதத்தலைவர்களின் ஆசியுரைகளும் இடம்பெற்றன.



கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்துக்கான உறுதியுரையை அரச உத்தியோகத்தர்கள் எடுத்துக் கொண்டனர். (எ-10)

# வடமாகாணத்தில் 3499 வர்த்தகர்கள் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கை

## 2 கோடியே 58 இலட்சத்து 38, 500 ரூபாய் தண்டப்பணம் விதிப்பு

வவுனியா, ஜன.02

2024ஆம் ஆண்டு வடமாகாணத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 3499 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களின் ஊடாக 02 கோடியே 58 இலட்சத்து 38 ஆயிரத்து 500 ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் வடமாகாண உதவிப்பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்தார்.

3445 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 3361 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மேலும், வவுனியா மாவட்டத்தில் 744 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 903 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 946 வர்த்தகர்களுக்கு வவுனியா நீதிமன்றத்தின் ஊடாக 05 இலட்சத்து 74 ஆயிரத்து 8 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரிசி விற்பனை தொடர்பான 774 விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வவுனியா மாவட்டத்தில் மட்டும் 126 விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-10)

# யாழில் கஞ்சாவுடன் கைதானவர் மறியலில்

யாழ்ப்பாணம், ஜன.02

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

21 வயதுடைய குறித்த இளைஞன் 05 கிராம் கஞ்சாவுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை, விளக்கமறியலில் வைக் குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-05)




கனடா - நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தின் ஒளிவிழா மற்றும் 2024 வருடாந்த குளிர்கால ஒன்றுகூடல் நிகழ்வு என்பன ஸ்கார்பரோ நகரில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் நெடுந்தீவு மற்றும் தாயக அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. இதன்போது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டு மீண்டும் மலரும் எம்மை சிதைக்கமுடியாது

## மகிந்த இறுமாப்பு



கொழும்பு, ஜன. 02

**மொட்டுக்கட்சி படுதோல்வியடைந்து விட்டதாகவும் அதற்கு இனி எதிர்காலம் இல்லை என்று எவரும் கனவு காணக்கூடாது எனவும் மொட்டு மீண்டும் மலரும் என பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மொட்டுக் கட்சியை எவராலும் சிதைக்க முடியாது. அது மீண்டெழும்.

எதிர்வரும் தேர்தல்களில் எமது கட்சி பலத்தைக் காட்டும். பொய் வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்தவர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

மொட்டுக் கட்சி தற்போது ஆட்சியில் இல்லாததன் அருமையை மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள்.

எமது கட்சி மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும்.

மக்கள் நிம்மதி யாக வாழும் சூழலை ஏற்படுத் துவோம்-என்றார். (அ)

# இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு வரி நீக்கப்படாது!

கொழும்பு, ஜன. 02

இறக்குமதி செய்யப்படும் அரிசி மீதான வரி நீக்கப்படமாட்டாது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் வகையில் 77,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது துறைமுகத்தில் உள்ள சுமார் 11,000 மெற்றிக் தொன் அரிசி, இன்னும் ஓரிரு நாட்களில் விடுவிக்கப்படும்.

கணிசமான அளவு அரிசி தொகை தற்போது நாட்டுக்குள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

எனினும், தனியார் துறையின் விநியோக வலையமைப்பிலுள்ள சில சிக்கல் காரணமாகத் தாமதம் ஏற்படலாம்.

ஜனவரி மாத நடுப்பகுதியளவில் உள்நாட்டு விவசாயிகளின் அரிசியும் சந்தைக்குக் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கிலேயே இறக்குமதி செய்யப்படும் அரிசிக்காக விதிக்கப்படும் வரியை நீக்குவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லை.

அத்துடன், அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையைத் திருத்துவது தொடர்பிலும் அமைச்சரவை எந்த நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (அ)

# கொழும்பு பிரதம நீதவானாக தனுஜா லக்மாலி நியமனம்!

கொழும்பு, ஜன. 02

கோட்டை நீதவானாகச் செயற்படும் தனுஜா லக்மாலி கொழும்பு பிரதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதி சேவைகள் ஆணைக்குழுவினூடாக இந்த இட மாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே மொறட்டுவை மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தற்போது கல்கிஸை நீதவானாகச் செயற்படும் நிலுபுலி லங்கா கோட்டை நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம், மொறட்டுவை மேலதிக நீதவான் சத்துரிக்கா சில்வா கல்கிஸை நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# 6 வருடங்களில் 13 இலட்சம் இலங்கையர் தொழில் நிமித்தமாக வெளிநாடு பயணம்

கொழும்பு, ஜன. 02

கடந்த 6 வருடங்களில் 13 இலட்சம் இலங்கையர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**2024ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றில் அதிகளவானோர் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்ற ஆண்டாக பதிவாகியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.**

இவ்வருடத்தில் 3 இலட்சத்து 12 ஆயிரத்து 836 பேர் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளதாக பணியகம் தெரிவித்துள்ளது.

**1 இலட்சத்து 85 ஆயிரத்து 162 ஆண் தொழிலாளர்களும் 1 இலட்சத்து 27 ஆயிரத்து 674 பெண் தொழிலாளர்களும் இவ்வாறு தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.**

இதற்கு முன்னர் 2022ஆம் ஆண்டு அதிகளவானோர் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றதாகவும், கடந்த 6 வருடங்களில் 13 இலட்சம் இலங்கையர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சலோச்சன கமகேயின் வழக்கை வேறு நீதிமன்றத்துக்கு மாற்றக் கோரிக்கை!

கொழும்பு, ஜன. 02

90 இலட்சம் ரூபா கையூட்டல் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சலோச்சன கமகே உள்ளிட்ட இருவருக்கு எதிராக கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை வேறு நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே நீதிச் சேவை ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கை கொழும்பு பிரதான நீதவானினால் எழுத்து மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சலோச்சன கமகே தமது சகோதரர் என்பதனால் இந்த வழக்கைத் தனது அதிகார வரம்புக்கு எடுத்துச் செல்ல முடியாது என அவர் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, குறித்த வழக்கை விசாரிப்பதற்குப் பொருத்தமான நீதவான் ஒருவரை நியமிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே தமது கடிதத்தில் கோரியுள்ளார்.

கோட்டை - மாதிவெல பிரதேசத்தில் வசிக்கும் வர்த்தகர் ஒருவரின் உறவினருக்கு சொந்தமான காணி நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர், இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக கையூட்டல் பெற்ற குற்றச்சாட்டில் சலோச்சன கமகே உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கைதியை சந்திப்பதற்கு சென்ற நண்பர்கள் கைது

கொழும்பு, ஜன. 02

காலி சிறைச்சாலையில் உள்ள கைதி ஒருவருக்கு ஐஸ் மற்றும் புகையிலை கொண்டு வந்த கைதியின் நண்பர்கள் இருவரை நேற்று முன் தினம் காலி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த கைதி திருட்டு குற்றத்துக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று முன் தினம் மாலை மாம்பழங்களுடன் அவரைப் பார்க்க ரத்கமவைச் சேர்ந்த இரண்டு நண்பர்கள் வந்துள்ளனர்.

சிறை அதிகாரிகள் மாம்பழத்தைச் சோதனையிட்ட போது, அதில் மெழுகினால் சுற்றப்பட்ட எட்டு கிராம் ஐஸ் மற்றும் 6 சிறிய புகையிலைத் துண்டுகள் இருப்பது தெரிய வந்தது.

இக் குற்றச்சாட்டில் கைதியின் நண்பர்கள் இருவரையும் காலி பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ)

# சவால்களைச சரியாக அடையாளம் கண்டு நாட்டின் எதிர்காலத்தை வலுப்படுத்துவோம்!

## சஜித் புத்தாண்டு வாழ்த்து

கொழும்பு, ஜன. 02

நமது தாய்நாடு தற்போது எதிர்கொள்ளும் சவால்களை சரியாக அடையாளம் கண்டு, அவற்றை வெற்றிகொள்ளத் தேவையான ஆற்றல், வலிமை மற்றும் தொலைநோக்குடன் செயல்பட புது வருடத்தில் நாம் அனைவரும் உறுதி பூணவேண்டும். இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவதற்கான திட்டத்தை நாம் மேலும் வலுப்படுத்தவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில்-கடந்த காலத்தைப் போல குறுகிய இன, மத கருத்துக்களால் பிளவுபட்ட அரசியல் திட்டங்கள் மீண்டும் தலைதூக்காமல் இருப்பது மிக முக்கியம். அத்துடன் கடந்த நான்கு வருடங்களாக நாட்டு மக்கள் எதிர்கொண்ட நிச்சயமற்ற தன்மை, ஏமாற்றங்களை முடிவுக்கு கொண்டுவந்து, மக்கள் தாய்நாட்டில் தங்கியிருக்க ஏதுவான பொருளாதார, அரசியல், இதில் நாம் செய்ய வேண்டிய யது அமைதியின்மையை இல்லாதொழித்து நிம்மதியை வெற்றி பெறச்செய்வதற்கான பாதையை சரியாக தெளிவுபடுத்திக் கொள்வதாகும். நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியால் சிதைந்துள்ள வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பப் புதிய பொருளாதார திட்டமும் செயல்முறையும் தேவை என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது.

எனவே நாட்டின் எதிர்காலத்திற்காக அரசியல், சமூக மற்றும் பொருளாதார முன்னெடுப்புகளை வலுப்படுத்த புது வருடத்தில் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம்-என்று கூறியுள்ளார். (அ)

# சந்தர்ப்பங்களை தவறவிடாது ஒன்றிணைந்து பயணிப்போம்

## பிரதமர் புத்தாண்டு வாழ்த்து

கொழும்பு, ஜன. 02

ஒரு தேசமாக ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கு கடந்த காலங்களில் எமக்கு பல சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. எனினும், குறித்த தருணங்களின் நன்மைகளை முழுவதுமாக அடைவதில் நாம் தோல்வி கண்டோம். எவ்வாறெனினும், அவ்வாறு கிடைத்துள்ள சந்தர்ப்பங்களை தவற விடாது அவற்றை பாதுகாத்துக் கொள்ள நாம் ஒன்றிணைந்து செயலாற்றவேண்டும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு பிரஜையும் இனம், பாலினம் அல்லது மதம் என்ற பேதங்களைக் கடந்து அமைதியான, சுதந்திரமான, கண்ணியமான மற்றும் பரிபூரணமான வாழ்க்கையை வாழக்கூடிய எதிர்காலத்தை உருவாக்குவதே தமது நோக்கம் எனவும், உலகத்தின் மத்தியில் அபிமானம்மிக்க, வளமான நாடாக "இலங்கை" என்ற நாமத்தை மிளிரச் செய்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றுவோம் எனவும் பிரதமர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனுஷவுக்கு எதிராக சி.ஐடியில் முறையீடு!

## சொத்துக்கள் தொடர்பில் விசாரிக்குமாறு

கொழும்பு, ஜன. 02

**முன்னாள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கு எதிராகக் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.கையூட்டல் மற்றும் ஊழலுக்கு எதிரான மக்கள் சக்தி என்ற அமைப்பின் தலைவர் ஜாமுனி கமந்த துஷாரவினால் இந்த முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.**

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை வழங்கும் போது, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார கையூட்டல் பெற்றிருக்கலாம் என்பதால் அவரது சொத்துக்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு கோரி இந்த முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டைக் கையளித்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட ஜாமுனி கமந்த துஷார, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவிடம் விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்து பணமோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் திசர நாணயக்கார அண்மையில் கைது செய்யப்பட்டார்.

அவரது வங்கிக் கணக்கிலிருந்து 27 கோடி ரூபாய் பணம் வைப்பிலிடப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், மனுஷ நாணயக்கார தற்போது வெளிநாடொன்றில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, அவரை நாட்டுக்கு வரவழைத்து அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

## கடந்த அரசின் அரச நியமனங்கள் மீளாய்வு செய்வதற்கு விசேட குழு

கொழும்பு, ஜன. 02

அரச சேவையின் தேவைக்கு ஏற்ப அன்றி, அரசியல் தேவைக்காக கடந்த அரசாங்கத்தால் பல்வேறு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறான நியமனங்கள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையிலான விசேட குழுவொன்றை நியமிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-அரச சேவையில் இணைக்கப்பட்டுள்ளவர்களை சேவையிலிருந்து நீக்குவதற்கு எதிர்பார்க்கவில்லை. அரச உத்தியோகத்தர்களை முறையாக அரச சேவையில் ஈடுபடுத்தும் நோக்கத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் வைத்தியசாலைகளின் தேவைக்கேற்ப அன்றி அரசியல் தேவைகளுக்காகவே பெரும்பாலான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே இவ்வாறானவர்களை இடமாற்றம் செய்த போதும் நாம் பல்வேறு நெருங்களை எதிர்கொண்டிருக்கின்றோம்.

எவ்வாறிருப்பினும் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் மக்களுக்கு சேவையாற்றக் கூடியவாறு பொறுத்தமான இடங்களில் சேவைக்க மர்த்தப்படவேண்டும். அதேபோன்று அத்தியாவசிய பற்றாக்குறைக் கேற்பவும் நியமனங்கள் வழங்கப்படவில்லை.

பல்வேறு அமைச்சுக்களில் இந்த அரச நியமனங்களில் பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன.

அந்த வகையி லேயே ஆணைக்குழுக்கள், அமைச்சுக்கள், திணைக்களங் கள் மற்றும் நியதிச்சபை நிறுவ னங்கள் மற்றும் மாகாண சபை களின் ஆளணியை மீளாய்வு செய்து இன்றியமையாத ஆட் சேர்ப்புகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

## நீதி அமைச்சருடன் பிரி.தூதுவர் சந்திப்பு

கொழும்பு, ஜன. 02

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாண யக்கார மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் அன்ரூ பெட்ரிக் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நீதி மற்றும் தேசிய ஒருமைப் பாட்டு அமைச்சில் இடம் பெற்றது.



பிரித்தானிய தூதரகம் மற்றும் நீதி அமைச்சின் உயர் அதிகாரிகள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

## தடை செய்யப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகள் மதுபானப் போத்தல்களுடன் வர்த்தகர் கைது!

கொழும்பு, ஜன. 02

கட்டுநாயக்க விமான நிலையத்தில், கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தடை செய்யப்பட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகள் மற்றும் மதுபானப் போத்தல்களுடன் குறித்த வர்த்தகர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

கொழும்பு 14 பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் இந்தியாவின் பெங்களூர் நகரத்திலிருந்து நேற்று முன் தினம் அதிகாலை 03.50 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து வெளிநாட்டு சிகரட்டுகள், 125 மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபரான வர்த்தகர் நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் உள்ள மதுபானச்சாலைகள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கு விற்பனை செய்வதற்காக இந்த வெளிநாட்டு சிகரெட்டுகள் மற்றும் மதுபானப் போத்தல்களை கொண்டுவந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# சைபர் தாக்குதல் குறித்து விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 02

அரச இணையதளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூன்றாம் தரப்பினரால் ஊடுறுவப்படுகின்றமை அரச தரவு பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாகும். அந்த வகையில் தரவு கட்டமைப்பில் ஏதேனும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதற்காக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றனவா என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச அச்சகத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் சைபர் தாக்குதலுக்கு இலக்காகியது. இதேவேளை பொலிஸ் திணைக்களத்தின் யூடியூப் தளமும் மூன்றாம் தரப்பினரால் ஊடுருவப்பட்டது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக பதிவாகி வருகின்றமை தொடர்பில் ஊடகவியலாளர் மாநாட்டில் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-தரவு பாதுகாப்பு தொடர்பில் சிக்கல் காணப்படுகிறது. அதன் காரணமாகவே அரச இணையத்தளங்கள் ஊடுருவல் போன்ற சம்பவங்கள் பதிவாகின்றன. இது தொடர்பில் கடந்த சில வாரங்களாக அரசாங்கம் அவதானம் செலுத்தி வருகிறது. அதற்கமைய சில தகவல்களும் கிடைத்துள்ளன.

தொடர்ச்சியாக இவ்வாறான சம்பவங்கள் குறித்து உன்னிப்பாக அவதானம் செலுத்தப்பட்டு வருகிறது. தரவு பாதுகாப்பு தொடர்பில் விரைவில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். அதேபோன்று எந்த வழியில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறு கின்றன என்பது குறித்த விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன-என்றார்.

## புலமைப்பரிசில் பெறுபேறுகளை விரைவில் வெளியிடத் தீர்மானம்

கொழும்பு, ஜன. 02

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை ஆராய்ந்து, அது தொடர்பில் விரைவில் அடுத்த கட்ட தீர்மானம் எடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அண்மையில் நிறைவடைந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளில் கசிந்த 3 வினாக்களுக்குப் புள்ளிகளை வழங்குவதற்கு பரீட்சைகள் திணைக்களம் மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்கி உயர்நீதிமன்றம் நேற்று முன் தினம் உத்தரவிட்டது.

அத்துடன், குறித்த சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேட குழு முன்வைத்துள்ள பரிந்துரைகளில் மிகவும் பொருத்தமான ஒன்றை நடைமுறைப்படுத்துமாறும் உயர்நீதிமன்றம் பரீட்சைகள் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்தநிலையில் இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர, உயர் நீதிமன்றின் உத்தரவு தொடர்பில் ஆராயப்படும் என குறிப்பிட்டார்.

அத்துடன் அவற்றை கருத்திற்கொண்டு மிக விரைவில் புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளையும் வெட்டுப் புள்ளிகளையும் வெளியிடுவதற்கு எதிர்பார்ப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (அ)

# ரஞ்சன் ராமநாயக்கவிடம் சி.ஐ.டி. தீவிர விசாரணை!

கொழும்பு, ஜன. 02

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளனர்.

கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை அவதூறு செய்யும் வகையில், ரஞ்சன் கருத்து வெளியிட்டாரா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவிடம் சுமார் இரண்டு மணித்தியாலங் [illegible] கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளனர்.

கர்தினாலை அவமரியாதை செய்யும் வகையில் ரஞ்சன் வெளியிட்ட கருத்துக்கள் [illegible] தம்மிடம் உள்ளதாக நாமல் குமார தெரிவித்திருந்தார்.

நாமல் குமார தொடர்பில் விசாரணை நடத்துமாறு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் நாமல் குமாரவிடமும் மேலும் விசாரணை நடத்தப்பட உள்ளதாக குற்ற விசாரணைப் பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய பணிக்கு தயாராகுக!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அழைப்பு

கொழும்பு, ஜன. 02

**குறுகிய பேதங்களுக்கு அப்பாற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய பணிக்கு ஆயத்தமாக வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**


2025 ஆம் புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று காலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெளிப்படைத்தன்மையுடன் நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக்கூறக்கூடிய உன்னத சேவையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசியல் தலைவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் ஒன்றிணைந்து இதனை ஒரு பொறுப்பாகவும் கடமையாகவும் கருத வேண்டும்.

சாதாரண மக்களுக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் உன்னத, நேரிய பயனுள்ள பொதுச் சேவையை வழங்குதல் போலவே நெறிமுறைகளைப் பேண வேண்டும். மேலும், பொதுச் சொத்துக்கள் மற்றும் வளங்களை துஷ்பிரயோகம் செய்ய அனுமதிக்கக் கூடாது.

நாட்டுக்கு செயல் திறமையோடு வினைத்திறனான சேவையை ஆற்ற வேண்டும். தனிநபர் இலாபத்தை விட நாட்டு மக்களின் நலனுக்காக கூட்டாக செயற்பட ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கிறேன் - என்றார். (அ)



புத்தாண்டை வரவேற்கும் டான் தொலைக்காட்சி குழுமத்தின் அனுசரணையில் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட யாழ். மணிக் கூட்டுக் கோபுரப் பகுதியில் இடம்பெற்ற வாணவேடிக்கை. டான் தொலைக் காட்சி குழுமம் புதிய ஆண்டை வரவேற்கும் விதமாக இந்த நிகழ்வை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் - லி.ஜெகன்)

# சகலரும் சகோதரத்துவத்துடன் வாழப்பழகிக் கொள்ளவேண்டும்!

## பேராயரின் புத்தாண்டு வாழ்த்துச்செய்தி

கொழும்பு, ஜன. 02

அனைவருடனும் சகோதரத்துவத்துடன் வாழ பழகிக்கொள்ள வேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கத்தோலிக்கர்களுக்கு மலந்திருக்கும் புத்தாண்டு கிறிஸ்து பிறப்பின் யூபிலி ஆண்டாகும். இந்த ஆண்டில் அனைத்து துறைசார்ந்தவர்களும் உரிய பொறுப்புடன் செயற்பட வேண்டும் என பரிசுத்த பாப்பரசர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆகவே அதற்கான அனைத்து தயார்ப்படுத்தல்களையும் கத்தோலிக்கத்திருச்சபை எடுத்துள்ளது.

தர்மம் என்பது வெறுமனே புத்தகங்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட விடயமொன்றல்ல. மாறாக வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய விடயமாகும். ஆகவே நாம் எந்த தெரிவை மேற்கொண்டாலும் தர்மத்திற்கு இணங்க மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அனைத்து சந்தர்ப்பத்திலும் நாம் பிழையான விடயங்களை மேற்கொள்ள எத்தனிக்கும் சமயத்தில் எமது மனசாட்சியுடன் உரையாடி நாம் கற்றுக்கொண்ட தர்ம உபதேசங்களுக்கு அமைய செயற்பட வேண்டியது அவசியமாகும்.

அனைத்து சந்தர்ப்பங்களிலும் மனிதாபிமான ரீதியில் செயற்பட வேண்டும். மத போதனைகளுக்கு அமைய வாழ்வை கொண்டு நடத்த வேண்டும். அதேபோன்று மாலை நேர ஜெபமாலையை மறந்து விட வேண்டாம் அனைவருடனும்

சகோதரத்துவத்துடன் வாழப்பழகிக்கொள்ள வேண்டும். அதன் ஊடாக புத்தாண்டு ஆசீர்வாதம் நிறைந்த ஆண்டாக அமைய வாழ்த்துகின்றேன்- என்றுள்ளது. (அ)

# பண வீக்கம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 02

கொழும்பு நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த மாதத்தில் அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தமது புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கடந்த நவம்பர் மாதத்தில் மறை 2.1 சதவீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் டிசம்பர் மாதத்தில் மறை 1.7 சதவீதமாக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன், நவம்பர் மாதத்தில் மறை 3.3 சதவீதமாக இருந்தஉணவல்லா பணவீக்கம் டிசெம்பரில் மறை 3 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

மேலும் கடந்த நவம்பர் மாதம் 0.6 வீதமாக இருந்த உணவு பணவீக்கம் இந்த மாதம் சிறியளவு அதிகரித்து 0.8 சதவீதமாக பதிவாகியுள்ளது. (அ)

# விபத்தில் சிக்கிய கொழும்பு பல்கலை. மாணவன் யாழில் மரணம்!

யாழ்ப்பாணம், ஜன. 02

மோட்டார் சைக்கிள் - கார் விபத்தில் சிக்கிய கொழும்பு பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன் ஒருவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். புகையிரத நிலைய வீதி, வைரவபுளியங்குளம், வவுனியாவைச் சேர்ந்த சந்திரபோஸ் சஜீகாந் (வயது 23) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

இவர் கடந்த 25ஆம் திகதி தனது வீட்டில் இருந்து நண்பரின் வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தார். இதன்போது குருமண்காடு பகுதியில் வீதியில் நிறுத்தி வைத்திருந்த காருடன் அவரது மோட்டார் சைக்கிள் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இந்நிலையில் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக 26ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றிரவு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (05)

# போலி கடவுச்சீட்டுடன் 2 இலங்கையர் கைது!

கொழும்பு, ஜன. 02

போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி நேபாளம் ஊடாக இங்கிலாந்து செல்ல முற்பட்ட இலங்கையர்கள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் முதலில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 39 வயதுடைய மட்டக்களப்பைச் சேர்ந்தவர்.

சந்தேக நபர் நேபாளத்துக்குச் செல்லும் இந்திய விமான சேவையில் பயணிப்பதற்காக நேற்று முன் தினம் விமான நிலையத்துக்கு வந்திருந்தார், ஆனால் குடிவரவு கரும பீடத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

குடிவரவு கருமபீட அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் அந்த நபரை பரிசோதித்ததில், அவருடைய கடவுச்சீட்டு போலியானது என்றும், இதே போன்ற அம்சங்களைக் கொண்ட மற்றொரு நபரின் தகவலைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது என்றும் கண்டறிந்தனர். (அ)

# நிலந்தி கொட்டஹச்சி சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு, ஜன. 02

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிலந்தி கொட்டஹச்சி மீது சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்பியதாகக் கூறி அவருடைய சட்டத்தரணி மூலம் அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

20,000 ரூபாய் செலுத்தி நிலந்தி கொட்டஹச்சியுடன் ஹோட்டல் ஒன்றுக்கு சென்றதாக, நபர் ஒருவர் சமூக வலைத்தளத்தில் அவதூறான பதிவுகளை வெளியிட்டிருந்ததாக சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதனால் நிலந்தி கொட்டஹச்சிக்கு ஏற்பட்ட அவதூறுகள் மற்றும் அபகீர்த்திக்காக



நீதியை நிலை நாட்டவேண்டும் என மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கோரியுள்ளார்.

இது தொடர்பில், சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-தனது மனுதாரருக்கு எந்த விதமான தவறான நடத்தைகளும் இல்லை. குறித்த நபரை மனுதாரர் ஒருபோதும் அறிந்திருக்கவில்லை-என்றார். (அ)

# இனப்பிரச்னைக்கு தீர்வைக் காண அநுர நடவடிக்கை எடுக்கவேண்டும்

## மனோ கணேசன் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 02

நாட்டு மக்கள் வழங்கியுள்ள ஆணையைப் பயன்படுத்தி தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வை காண்பதற்கு அநுர குமார திஸநாயாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

வடக்கு-கிழக்கு, தெற்கு மற்றும் மலையகம் என அனைத்து பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு கிடைக்கப்பெற்றுள்ளது. அனைத்து இன மக்களின் ஆசியுடன் ஆட்சி அமைக்கப் பட்டுள்ளமை தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறு மக்கள் வழங்கியுள்ள ஆணையை பயன்படுத்தி பொருளாதாரப் பிரச்னை மற்றும் இனப்பிரச்னைக்கு தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்கள் என்னை நிராகரிக்கவில்லை. பாராளுமன்றம் தெரிவாவதற்கு பெறவேண்டிய வாக்குகளைப்பெற வில்லை என்பதே உண்மை. நான் சுமார் 20 ஆயிரம் வாக்குகளை எடுத்தேன்.

சில மாவட்டங்க ளில் 5 ஆயிரம் வாக்குகளைப் பெற்றவர்கள் பாராளுமன்றம் சென்றனர். இதுதான் இந்த தேர்தலை முறைமை.

அதேவேளை, சிஸ்டம் சேஞ்ச் என்பதை அரசாங்கம் மலையகத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



புதுவருடத்தில் மகிழ்ச்சி செய்தி

# இ. போ. ச. சொகுசு பஸ் சேவை மகரகம வரைக்கும் விஸ்தரிப்பு

கல்முனை, ஜன.02

**இலங்கை போக்குவரத்து சபையின் கல்முனை சாலையால் முதல் முறையாக நடத்தப்படும் முற்றிலும் குளிரூட்டப்பட்ட பஸ் சேவை மகரகம வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்று கல்முனை சாலை முகாமையாளர் வி. ஜௌபர் தெரிவித்தார்.**

தினமும் இரவு 10. 30 மணிக்கு கல்முனை பிரதான பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து ஆரம்பமாகும் இப்புதிய சொகுசு பஸ் சேவை கட்டுநாயக்கா விமான நிலயம் சென்று தொடர்ந்து கொழும்பு பிரதான பஸ்தரிப்பு நிலையம் சென்று பம்பலப்பிட்டி வெள்ளவத்தை தெஹிவல ஊடாக மகரகமவை சென்றடையும்.

அதேபோன்று, அங்கிருந்து கல்முனைக்கான மற்றுமொரு குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் சேவை இரவு 7. 30 மணிக்கு ஆரம்பமாகும்.

இரவு 7. 30 மணிக்கு மகரகம பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் பஸ் 9. 30க்கு கொழும்பு சென்று அங்கிருந்து 10. 30 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை சென்றடையும்.

அங்கிருந்து புறப்படும் பஸ் மறுநாள் காலை 6 மணிக்கு கல்முனை பிரதான பஸ் தரிப்பு நிலையத்தை வந்தடையும்- என்றார்.

(எ)

## கிளீன் சிறீலங்கா உறுதியுரையுடன் முதல் நாள் கடமை ஆரம்ப நிகழ்வு



சாய்ந்தமருது, ஜன.02

கிளீன் சிறீலங்கா திட்ட உறுதியுரையுடன் முதல் நாள் கடமை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையில் நடைபெற்ற முதல் நாள் கடமை ஆரம்ப நிகழ்வில் அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

சுகாதார வைத்திய அதிகாரியால் தேசிய கொடி ஏற்றி வைக்கப்பட்டதுடன், கிளீன் சிறீலங்கா திட்ட சத்தியப் பிரமாண உறுதிமொழி எடுக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

(எ)

## நீதிமன்றத்தில் சத்திய பிரமாணம்



அக்கரைப்பற்று, ஜன.02

கிளீன் சிறீலங்கா தேசிய நிகழ்ச்சித் திட்டம், 2025ஆம் ஆண்டு கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வாக அக்கரைப்பற்று மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நீதிபதி ஏ. சீ. றிஸ்வான் தலைமையில் சத்திய பிரமாண நிகழ்வு நடைபெற்றது.

இதில், மேலதிக மாவட்ட நீதிபதி ரெசீபா றஜீவன், பதிவாளர்கள், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(எ)

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வருடாந்த ஒன்று கூடல்

கல்முனை, ஜன.02

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் நலன்புரிச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த ஒன்று கூடலும் சேவை நலன் பாராட்டு நிகழ்வும் நடை பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள் பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



இதன்போது, பல்வேறு கலை கலாசார நிகழ்வுகள் நடைபெற்றதுடன் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நீண்டகாலமாக பணியாற்றி வருடாந்த இடமாற்றம் பெற்று சென்ற பலர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

(எ)

# கல்முனை, அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர்கள் கடமையேற்றனர்





கல்முனை, ஜன.02

கல்முனை மாநகர சபையின் புதிய ஆணையாளராக ஏ. ரி. எம். றாபியும் அக்கரைப்பற்று மாநகர சபையின் புதிய ஆணையாளராக என். எம். நௌபீஸும் நேற்றுப் புதன்கிழமை தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

கல்முனை மாநகர சபையின் புதிய ஆணையாளரான றாபி, இதற்கு முன்னர் அக்கரைப்பற்று மாநகர ஆணையாளராக கடமையாற்றியவர்.

அவ்வாறே அக்கரைப்பற்று மாநகர சபையின் புதிய ஆணையாளரான நௌபீஸ் இதற்கு முன்னர் கல்முனை மாநகர ஆணையாளராகவும் கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளராகவும் கடமையாற்றியவர்.

(எ)



கிளீன் சிறீ லங்கா தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்ததாக 2025 ஆம் ஆண்டில் அரச கடமைகளை ஆரம்பித்தல், அரசாங்க சேவை சத்தியப் பிரமாணம் செய்யும் நிகழ்வு நேற்றுக் காலை 8. 30 மணியளவில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

## திருமலையில் பெறுமதி மிக்க வளம் பயன்படுத்தப்படவில்லை

இம்ரான் எம். பி. கவலை



திருகோணமலை, ஜன.02

திருகோணமலையில் உள்ள பெறுமதி மிக்க வளம் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பது கவலைக்குரியது என்று பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் இம்ரான் எம். பி. பிரேரணை ஒன்றை முன்வைத்து உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"கும்புறுபிட்டியில் அமைந்துள்ள உப ஒலிபரப்பு நிலையம் முன்னர் ஜேர்மன் வானொலிக்கு சொந்தமாக இருந்தது. தற்போது அது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் உப நிலையமாக செயல்படுகிறது.

இதில், எமது பிரதேச நிகழ்ச்சிகள் எதுவும் ஒலிபரப்பப்படுவதில்லை. வெளிநாட்டு ஒலிபரப்பு ஒன்றுக்காக மட்டும் இந்த நிலையம் பயன்படுத்தப்படுகின்றது. அதுவும் மாலை வேளையில் மட்டும் இந்த ஒலிபரப்பு இடம்பெறுகின்றது. இதற்காக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் வாடகை பெறப்படுகின்றது. ஏனைய நேரங்களில் இந்த நிலையம் எவ்வித செயல்பாடும் இன்றி இருக்கின்றது.

இம்மாவட்டத்தில் உள்ள பெறுமதி மிக்க வளம் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பது கவலைக்குரியது.

எனவே, இந்த ஒலிபரப்பு நிலையம் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். இப்பகுதி கலை பண்பாட்டு நிகழ்வுகளை ஒலிபரப்ப முக்கியத்துவம் கொடுக்கப்படலாம்"- என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாமீது 68 ட்ரோன்களை ஏவி உக்ரைன் இராணுவம் தாக்குதல்

## அனைத்தும் சுட்டுவீழ்த்தப்பட்டதாக ரஷ்யா அறிவிப்பு

மொஸ்கோ, ஜன.02

**ரஷ்யா மீது 68 ட்ரோன்களை ஏவி உக்ரைன் இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. ஆனால், இந்த ட்ரோன்கள் அனைத்தையும் சுட்டு வீழ்த்தியதாக ரஷ்யா பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.**

உக்ரைன் - ரஷ்யா இடையே இன்று 1,042 ஆவது நாளாக போர் இடம்பெற்று வருகிறது. இந்தப் போரில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். போரை நிறுத்த பல்வேறு நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. போர் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில் இரு நாடுகளும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், ரஷ்யா மீது 68 ட்ரோன்களை ஏவி உக்ரைன் தாக்குதல் நடத்தியது. இந்த ட்ரோன்கள் அனைத்தும் வான் பாதுகாப்பு அமைப்பால் நடுவானில் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது. (எ)

# நேற்று முதல் பிரிக்ஸ் அமைப்பு உறுப்பு நாடாகியது தாய்லாந்து

பாங்கொக், ஜன.02

பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பு நாடுகளில் ஒன்றாக தாய்லாந்து இணைந்துள்ளது.

இதன்படி, 2025ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி நேற்று முதல் அந்த நாடு பிரிக்ஸ் அமைப்பில் உறுப்பினர் அந்தஸ்து பெற்றுள்ளது.

இது குறித்து, தாய்லாந்து வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட செய்தி குறிப்பில், பிரிக்ஸ் அமைப்பின் 2024ஆம் ஆண்டுக்கான தலைமையை யேற்ற ரஷ்யா, கடந்த டிசெம்பர் 28ஆம் திகதி வெளியிட்ட செய்தியில், 2025ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் பிரிக்ஸ் நாடுகளில் ஒன்றாக தாய்லாந்தும் இணையும் என உறுதிப்படுத்தியிருந்தது.

இதனால், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பு நாடுகளுடனான பொருளாதார உறவுகளை மேம்படுத்த உதவும் வகையில் ஒத்துழைப்பு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று தாய்லாந்து தெரிவித்துள்ளது. (எ)

# தீவிரவாத செயல் தொடர்பில் திட்டமிடுவதும் தீவிரவாதமே

## புதுடில்லி உயர் நீதிமன்றம் தீர்ப்பு

புதுடில்லி, ஜன.02

ஒரு தீவிரவாத செயலை பல ஆண்டுகளாக திட்டமிட்டு, அதைச் செயல்படுத்தாமல் இருந்தாலும் அது தீவிரவாதமே என்று இந்தியாவின் புதுடில்லி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சட்டவிரோத செயல்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டதற்கு எதிராக அல் -கொய்தா தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் தொடர்ந்த மேன்முறையீட்டு வழக்கை புதுடில்லி உயர் நீதிமன்றம் விசாரித்து வந்தது. இந்த வழக்கிலேயே மேற்கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. (எ)



வருட பிறப்பை முதலில் வரவேற்கும் வகையில், நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா நாடுகளில் மக்கள் பட்டாசுகள் கொளுத்தியும், இசை திருவிழாக்கள் நடத்தியும் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

# அமெரிக்கா, இங்கிலாந்து ஏமன்மீது கடும் தாக்குதல்

சனா, ஜன.02

ஏமன் மீது அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளன.

இஸ்ரேல் - காஸாவில் செயல்பட்டு வரும் ஹமாஸ் அமைப்பு இடையே ஓராண்டுக்கு மேலாக போர் நடைபெற்று வருகிறது. இந்தப் போரில் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்தப் போரில் ஹமாஸ் அமைப்புக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையில், ஏமனின் அல் ஹூடைடா மாகாணம் அட்-துஹயாதா மாவட்டம் அல்-பசா பகுதியில் அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் விமானப்படை விமானங்கள் வான்வழித் தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை.

இதேவேளை, கடந்த வாரம் ஏமனில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர். (எ)

# இஸ்ரேலில் பலஸ்தீனர்களுக்கு பதிலாக 16, 000 இந்தியர்களுக்கு வேலைவாய்ப்பு

புதுடில்லி, ஜன.02

இஸ்ரேலில் பலஸ்தீனர்களுக்குப் பதிலாக 16 ஆயிரம் இந்தியர்களுக்கு கட்டுமானத் துறையில் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் - இஸ்ரேல் மோதலால் மத்திய கிழக்கு பகுதியில் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்தத் தாக்குதலின் தொடர்ச்சியாக, இஸ்ரேலில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டு வந்த ஆயிரக்கணக்கான பலஸ்தீன தொழிலாளர்களுக்கு அந்த நாட்டு அரசு தடைவிதித்தது. அவர்களுக்குப் பதில் இந்தியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து பணியாளர்களை தெரிவு செய்யும் நடவடிக்கையில் இஸ்ரேல் மும்முரமாக ஈடுபட்டது.

இதன் விளைவாக தற்போது இஸ்ரேலில் கட்டுமான துறையில் இந்தியர்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு மட்டும் இந்தியாவிலிருந்து இஸ்ரேலுக்கு 16, 000 தொழிலாளர்கள் கட்டுமானப் பணிக்கு சென்றுள்ளனர். அவர்களுக்கு ஒரு மாதத்துக்கு இலவச உணவு, தங்குமிடம் தவிர ஒன்றரை இலட்சம் ரூபாய் சம்பளமாக வழங்கப்படுகிறது.

பாதுகாப்புக்கும் முழு உத்தர வாதம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# விண்வெளியில் 16 முறை புத்தாண்டு கொண்டாட்டம்





வாஷிங்டன், ஜன.02

சர்வதேச விண்வெளி மையத்தில் இருக்கும் சுனிதா வில்லியம்ஸ் 16 முறை புத்தாண்டு கொண்டாடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, பூமிக்கு மேல 400 கிலோ மீற்றர் உயரத்தில் மிதந்து கொண்டிருக்கும் எக்ஸ்பெடிஷன் 72 குழுவினர், பூமியைச் சுற்றி வரும்போது 2025ஆம் ஆண்டு பிறக்கும் தருணத்தில் 16 சூரிய உதயங்களையும் அஸ்தமனங்களையும் காண்பார்கள் என்று சர்வதேச விண்வெளி மையம் தெரிவித்துள்ளது. (எ)

# பேருந்துமீது லொறி மோதி பயங்கர விபத்து, 12 பேர் பலி

கராச்சி, ஜன.02

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் தேசிய நெடுஞ்சாலையில் பேருந்து மீது லொறி மோதி பயங்கர விபத்து ஏற்பட்டது. இதில் 12 பேர் பலியாகினர்.

திருமண நிகழ்வில் பங்கேற்று விட்டு திரும்பச் செல்லும் போதே இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், விபத்தில் உயிரிழந்தவர்களில் 8 பேர் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. ஐந்து பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. விபத்தையடுத்து லொறி சாரதி தப்பியோடிய நிலையில் அவரைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

## நீர்மூழ்கி கப்பல்களை மேம்படுத்தரூ. 2,867 கோடி மதிப்பில் ஒப்பந்தம்

புதுடில்லி, ஜன.02

இந்திய கடற்படையில் உள்ள நீர்மூழ்கி கப்பல்களை மேம்படுத்த பிரான்ஸ் நிறுவனத்துடன் 2,867 கோடி ரூபாய் மதிப்பில் இரு ஒப்பந்தங்களை பாதுகாப்புத்துறை அமைச்சு செய்துள்ளது.

கல்வாரி ரக நீர்மூழ்கி கப்பல்களில் நவீன கருவிகளைப் பொருத்த பிரான்ஸ் நாட்டின் நேவல் குரூப்புடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும், நீர்மூழ்கி கப்பலில் தீ விபத்து ஏற்பட்டால் கூட வெடிக்காத வகையில் டார்பிடோ பிரான்ஸ் தொழில்நுட்பத்தில் இந்தியாவில் தயாரிக்கப்படவுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் தொடர் அடுத்த சுற்றுக்கு முன்னேறினார் அரினா

பிரிஸ்பேன், ஜன.02

பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் தொடரில் அரினா சபலெங்கா, ஆஷ்லின் க்ருகர் ஆகியோர் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இந்த ரென்னிஸ் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ரஷ்யாவின் அன்னா கலின்ஸ்காயா, அமெரிக்காவின் ஆஷ்லின் க்ருகருடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆஷ்லின் க்ருகர் 6 - 3, 6 - 3 என்ற நேர் செட் கணக்கில் அன்னா கலின்ஸ்காயாவை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். இதே பிரிவில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் பெலாரஸின் அரினா சபலெங்கா, மெக்சிக்கோவின் ரெனாட்டா ஜராசுவாவுடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் அனுபவ வீராங்கனையான



அரினா சபலெங்கா 6 - 4, 6 - 0 என்ற செட் கணக்கில் ரெனாட்டா ஜராசுவாவை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (எ)

# மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார் மிர்ரா

பிரிஸ்பேன், ஜன.02

பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் தொடரில் 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார் மிர்ரா ஆண்ட்ரீவா.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ரஷ்யாவின் மிர்ரா ஆண்ட்ரீவா சக நாட்டவரான அன்னா பிளிங் கோவாவுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய மிர்ரா ஆண்ட்ரீவா 6 - 4, 6 - 4 என்ற நேர் செட் கணக்கில் அன்னா பிளிங்கோவாவை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)



# ஒருநாள் தரவரிசையில் மந்தனா மூன்றாம் இடம்



டுபாய், ஜன.02

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் துடுப்பாட்ட பட்டியலில் இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா 3ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி) மகளிர் ஒருநாள் கிரிக்கெட் தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் துடுப்பாட்ட பட்டியலில் தென்னாபிரிக்காவின் லாரா வோல்வோர்ட் (773 புள்ளி) முதல் இடத்தில் உள்ளார். இலங்கையின் சமரி அத்தபத்து (733 புள்ளி) ஒரு இடம் ஏற்றம் கண்டு 2ஆம் இடத்துக்கு வந்துள்ளார். ஸ்மிருதி மந்தனா (720 புள்ளி) ஒரு இடம் சரிவை சந்தித்து 3ஆம் இடத்துக்கு வந்துள்ளார்.

இந்தப் பட்டியலில் மேற்கு இந்திய தீவுகள் அணியின் தலைவி ஹேலி மேத்யூஸ் (652 புள்ளி) 6 இடம் ஏற்றம் கண்டு 7ஆவது இடத்துக்கு வந்துள்ளார். ஒருநாள் பந்துவீச்சாளர்கள் பட்டியலில் இங்கிலாந்தின் சோபி எக்லெஸ்டோன் (771 புள்ளி) முதல் இடத்திலும், அவுஸ்திரேலியாவின் மேஹன் ஸ்கட் (704 புள்ளி) 2ஆம் இடத்திலும், அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே கார்ட்னெர் (698 புள்ளி) 3ஆம் இடத்திலும் உள்ளனர்.

இந்தப்பட்டியலில் இந்தியாவின் தீப்தி சர்மா (665 புள்ளி) ஒரு இடம் ஏற்றம் கண்டு 5ஆம் இடத்துக்கு வந்துள்ளார். (எ)

# 14 - 0 என்ற கோல் கணக்கில் இந்திய அணி அபார வெற்றி

## மாலைதீவு மிக மோசமான தோல்வி

பெங்களூரு, ஜன.02

14 - 0 என்ற கோல் கணக்கில் மாலைதீவை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி பெற்றது.

சர்வதேச நட்பு ரீதியிலான மகளிர் உதைபந்தாட்ட போட்டி இந்தியாவின் பெங்களூருவில் நடைபெற்றது. இதில், இந்தியா - மாலைதீவு அணிகள் மோதின. இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே இந்திய மகளிர் அணி ஆதிக்கம் செலுத்தியது. இந்த ஆட்டத்தில் முதல் பாதியில் இந்திய அணி 7 கோல்களை அடித்து அசத்தியது. மாலைதீவு கோல் அடிக்க முடியாமல் திணறியது. இதனால் முதல் பாதி ஆட்டத்தில் 7-0 என்ற கோல் கணக்கில் இந்தியா முன்னிலை வகித்தது.

தொடர்ந்து நடைபெற்ற 2ஆவது பாதி ஆட்டத்திலும் இந்தியா ஆதிக்கம் செலுத்தியது. இதிலும் இந்தியா 7 கோல்களை அடித்து அசத்தியது. மாலைதீவு பதில் கோல் அடிக்க எடுத்த முயற்சிகளுக்கு பலன் கிடைக்கவில்லை. இறுதியில் இந்த ஆட்டத்தில் 14 - 0 என்ற கோல் கணக்கில் மாலைதீவை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி பெற்றது. (எ)



# ஜோகோவிச் அசத்தல்



பிரிஸ்பேன், ஜன.02

பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் தொடரில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவில் நோவக் ஜோகோவிச், அவுஸ்திரேலியாவின் ரிங்கி ஹிஜிகாடாவுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 6 - 3, 6 - 3 என்ற நேர் செட் கணக்கில் ரிங்கி ஹிஜிகாடாவை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். ஜோகோவிச் 2ஆவது சுற்றில் இன்று பிரான்ஸின் கெயில் மான்பில்ஸூடன் மோதவுள்ளார். (எ)

# இலங்கை - நியூசிலாந்து 3ஆவது போட்டி இன்று

வெலிங்டன், ஜன.02

இலங்கை - நியூசிலாந்து இடையிலான மூன்றாவது ரி - 20 போட்டி இன்று நடைபெறுகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ரி - 20 போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 186 ஓட்டங்கள் குவித்தது.



பின்னர் 187 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணியால் நியூசிலாந்து பந்துவீச்சை சமாளிக்க முடியவில்லை.19. 1 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த இலங்கை அணி 141 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் பறி கொடுத்தது. இதன் மூலம் 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூசிலாந்து 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இந்த நிலையில் மூன்றாவது போட்டி இன்று நடைபெறுகிறது.

# இந்தியா - இங்கிலாந்து இடையே முதல் ரி - 20 போட்டி 22ஆம் திகதி

## பும்ரா, கோலி, ரோஹித் இல்லை

புதுடில்லி, ஜன.02

இந்தியா - இங்கிலாந்து இடையே 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடர் இம்மாதம் 22ஆம் திகதி தொடங்கி பெப்ரவரி 2ஆம் திகதியுடன் முடிகிறது.

இந்திய கிரிக்கெட் அணி தற்போது அவுஸ்திரேலியாவில் பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இந்தத் தொடர் இம்மாதம் 7ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இதனையடுத்து இந்திய அணி சொந்த மண்ணில் இங்கிலாந்துக்கு எதிராக ரி - 20 மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. முதலில் ரி - 20 தொடரும் அதன் பிறகு ஒருநாள் தொடரும் நடைபெறவுள்ளது.

5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடர் ஜனவரி 22ஆம் திகதி தொடங்கி பெப்ரவரி 2ஆம் திகதியுடன் முடிகிறது. 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் பெப்ரவரி 6இல் தொடங்கி பெப்ரவரி 12இல் முடிகிறது. இந்த ஒருநாள் தொடர் சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கு ஒரு பயிற்சி ஆட்டமாக கருதப்படுகிறது. இந்த நிலையில், இந்த ஒருநாள் தொடருக்கான இந்திய அணியில் பும்ரா, விராட் கோலி, ரோஹித் சர்மா ஆகியோர் 3 வீரர்களுக்கு ஓய்வு வழங்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)

# "மிட்செல் மார்ஷ் குறித்து எந்த கவலையும் இல்லை"

சிட்னி, ஜன.02

மிட்செல் மார்ஷ் குறித்து எந்தக் கவலையும் இல்லை என்று அவுஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிராக மெல்பேர்னில் நடைபெற்ற நாலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணியின் மிட்செல் மார்ஷ் 3 ஓவர்கள் மட்டுமே பந்துவீசிய நிலையில் அதன்பின் அவர் பந்துவீசவில்லை. இதற்கான காரணமும் தெரிவிக்கப்படாமல் மாறாக ட்ராவிஸ் ஹெட், மார்னஸ் லபுஸ்சேன் உள்ளிட்டோர் பந்துவீசினர்.

இதனால், மிட்செல் மார்ஷூக்கு காயம் ஏற்பட்டிருக்கக்கூடும் என்றும், சிட்னி டெஸ்ட் போட்டியில் விளையாடுவது சந்தேகம் என்றும் தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில் மிட்செல் மார்ஷ் குறித்து பேசிய அவுஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் ஆண்ட்ரூ மெக்டொனால்ட்,

"மிட்செல் மார்ஷூக்கு காயம் ஏதும் இல்லை என்பதால், அதுகுறித்து எந்த கவலையும் இல்லை. மக்கள் அதைப் பற்றி அதிகமாக யோசித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். மேலும் அடிக்கடி அவர் பந்துவீச வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. மேலும், அவரது வேகம் அதிகபட்சமாக 120 கிலோ மீற்றர் தான். அதனால், காயம் குறித்து எந்தக் கவலையும் இல்லை"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர்கள்...

சவேந்திர சில்வாவின் சேவை நலன் பாராட்டு விழாவில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டாவறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2022ஆம் ஆண்டு அறகலய போராட்டத்தினால் ஏற்பட்ட குழப்ப நிலை, எனது இராணுவ வாழ்க்கையில் ஒரு சிக்கலான கட்டமாகும்.

இது எனது உண்மையான நண்பர்கள் மற்றும் உண்மையான எதிரிகள் யார் என்பதை காட்டிக்கொடுத்தது. இராணுவம் என்பது ஒரு உத்தியோகபூர்வ ஆயுதப் படையாகும்.

இது வெளியில் அல்லது உள்நாட்டில் அரசுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் மக்களைப் பாதுகாக்க தயாராக உள்ளது.

அரகலய போராட்டத்தின்போது ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்த இராணுவத்தினர் குறைந்தபட்ச அதிகாரத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என உத்தரவிட்டேன்.

எந்த ஒரு சாதாரண அப்பாவிக் குடிமகனும் இராணுவ துப்பாக்கிச் சூட்டில் இறப்பதை நான் விரும்ப வில்லை. நிராயுதபாணியான மக்களுக்கு எதிராக அதிகாரத்தைப் பயன்படுத்தும் ஒருவனாக இருக்க நான் விரும்பவில்லை.

இதேவேளை, அதிகார வெறி பிடித்த ஆட்சியாளர்கள் கூறுவது போல், அரசாங்கத்தை கவிழ்க்கவேண்டும் என்ற தீய நோக்கம் என்னிடம் இல்லை-என்றார். (அ)

## வடக்கு...

யாழ்.பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் சி.சிறிசற்குணராஜா தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று பல்கலைக்கழக மாணவர்களுக்கு வடக்கு மாகாண சபையால் நிதியுதவி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் 1984ஆம் ஆண்டு காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்தவர். அவர் படித்த காலம் மிக நெருக்கடியானது. அதைப்போலத்தான் அவர் பணிக்குச் சேர்ந்த 1991ஆம் ஆண்டு காலமும் நெருக்கடியானது. அவர்கள் நெருப்பாற்றை நீந்திக் கடந்துதான் பணியாற்றினார்கள்.

வடக்கு மாகாணத்தில் உள்ள அதிகாரிகள் கடமையுணர்வு மிக்கவர்கள். வடக்கு மாகாணத்தின் பலமே அவர்கள்தான். இப்போதுதான் வடக்கின் ஆளுநரைக்கூட யாழ்ப்பாணத்திலிருந்து கண்டுபிடித்திருக்கின்றார்கள். அரசியல் வாதிகளையும் கொழும்பிலிருந்து கொண்டுவரும் ஒரு காலம் இருந்தது. எங்களால் செய்ய முடியாது என்ற எண்ணம் இனியாவது மாற்றப்பட வேண்டும்.

வடக்கு மாகாண ஆளுநராக வேதநாயகனை இந்த அரசாங்கம் தேர்ந்தெடுத்தன் ஊடாக வடக்கு மாகாணத்தில் அரசாங்கத்தின், தேசிய மக்கள் சக்தியின் செல்வாக்கு ஒரு படி மேலே கூடி விட்டது. வடக்கு ஆளுநரும் அவரது அணியும் இந்த மாகாணத்தில் சிறப்பாக வேலை செய்கின்றார்கள். அவர்களை அப்படியே சேவை செய்யவிட்டால் போதும் என நினைக்கின்றேன்.

மாகாண சபை இல்லாமல் இருப்பது நல்லதுதான். இல்லாவிடின் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் சத்தம் போட்டுக்கொண்டிருப் பதைப் போல அங்கும் சத்தம்தான் போட்டுக் கொண்டிருப்பார்கள். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் 'மாஸ்ரர் பிளான்' இருக்கா என்று கேட்பார்கள். ஆனால் இந்த அதிகாரிகள்தான் இங்கிருந்து எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கின்றார்கள் - என்றார். (அ)

## ஐ.ம.சக்தியின்...

அரசியல் வேலைத்திட்டம் ஜனவரி முதல் வாரத்தில் இருந்து முன்னெடுக்கப்படும். கட்சியின் விசேட கூட்டமும் நடத்தப்படும். கட்சி மறுசீரமைப்பு பணியும் ஆரம்பமாகும். சில பதவிகளில் மாற்றம் வரும். அது மக்கள் எதிர்பார்க்கும் மாற்றமாக இருக்கும்.

கட்சித் தலைமைப்பதவியில் மாற்றம் வராது. ஆனால் தனக்குள்ள பலவீனங்களை இனங்கண்டு அவற்றை சரிசெய்வதற்குரிய நடவடிக்கையில் கட்சி தலைவர் ஈடுபடவேண்டும். மக்கள் அதனையே எதிர்பார்க்கின்றனர்.

அதேபோல ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இணைப்பு தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது-என்றார். (அ)

## கிளீன்...

நடை முறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி செயலணியொன்று அண்மையில் ஸ்தாபிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் என்.எஸ்.குமாநாயக்க, பதில் பொலிஸ் மா அதிபர் மற்றும் முப்படைகளின் தளபதிகள் உட்பட 18 பேர் ஜனாதிபதி செயலணியில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

"கிளீன் சிறிலங்கா" திட்டத்தை திட்டமிடல், வழிகாட்டுதல், நடை முறைப் படுத்துதல், முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவு செய்தல் என்பன இந்த ஜனாதிபதி செயலணியின் பொறுப்புகளாக வரையறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மக்கள்...

முன்னணி அபிவிருத்தித் தேவைகளாக அடையாளம் கண்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 2024ஆம் ஆண்டில் அடைந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை மேலும் உறுதிப்படுத்த இருப்பதாகவும், ஜனாதிபதி தமது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (அ)

## மீனவர்கள்...


தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்துக்கும், வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்துக்கும் இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலேயே இது தொடர்பான தீமானம் எடுக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் கடற்றொழில் அமைச்சால் முன்மொழியப்படவுள்ள புதிய சட்டமூலத்தை இடைநிறுத்தல், தமிழக அரசியல் தலைமைகளுடன் வடக்கு கிழக்கு தமிழ் பிரதிநிதிகள் பேச்சு முன்னெடுப்பதை வலியுறுத்தல், தேசிய மக்கள் சக்தியால் மீனவர் பிரச்னை தொடர்பில் கோரப்பட்ட கால அவகாசம் ஜனவரி மாதத்துடன் நிறைவடைதல், 2025 ஆண்டில் வட மாகாண மீனவர்களின் வாழ்வியல் செயற்திட்டங்கள், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்காவை சந்திப்பதற்கான தீர்மானம் போன்ற விடயங்கள் இதன் போது ஆராயப்பட்டன.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை தம்மைச் சந்திப்பதற்காக நேரம் ஒதுக்கிக் கொடுத்திருப்பதாக வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் மொ.ஆலம் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஏமன் குமார, வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் ஜோசப் பிரான்சிஸ், இணையத்தின் செயலாளர் மொகமட் ஆலம், இணையத்தின் பொருளாளர் ரவீந்திரன் பிரியா, ஊடக பேச்சாளர் அ.அன்னராசா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்ட மீனவ சங்க பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (அ)

# யாழில் வன்முறை கும்பல் அட்டகாசம் இளைஞர் மீதும் கடும் தாக்குதல்!





யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ்.நகரில் நேற்றுமுன்தினம் இரவு வன்முறை கும்பல் ஒன்று இளைஞர் ஒருவரை கீழே தள்ளிவிட்டு கொடூரமாக தாக்கும் காணொலி வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வருட இறுதிநாள் என்பதால் நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் நிகழ்வுகள் நடைபெற்றன. இவ்வாறு நிகழ்வுகளில் கலந்துகொண்ட பின்னர் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அமைந்துள்ள தனியார் பேருந்து தரிப்பு நிலையத்திற்கு வந்த கும்பல் ஒன்று அங்கு அட்டகாசம் புரிந்துள்ளது.

அந்த கும்பலானது முச்சக்கர வண்டியின் ஒரு சில்லினை தூக்கி ஆபத்தான முறையில் வீதியின் குறுக்கு மறுக்காக ஓடியது. அதன்பின்னர் குறித்த கும்பல் இளைஞர் ஒருவர் மீது, தலைக்கவசம், கையில் உள்ள பொருட்கள், கை, கால் என்பவற்றை பயன்படுத்தி கொலை வெறித் தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

இதனால் அந்த பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதுடன் குறித்த சம்பவம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் பயத்தையும் தோற்றுவித்துள்ளது.

இச்சம்பவம் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் திரு.தனபால ஆகியோரது கவனத்திற்கு கொண்டு செல்லப் பட்டுள்ளது. இச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதாக அவர்கள் தெரிவித்தனர். (05)

## யாழில்...

ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது. (அ)

## முக்கிய...

வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதாக பொய்யாக வாக்குறுதி அளித்து மக்களை ஏமாற்றியதாக குற்றம் சாட்டப்பட்ட சக்தி வாய்ந்த அரசியல் வாதி, ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சுற்றுலா வாரியத்திற்குள் தவறான நடத்தைகளில் ஈடுபட்ட பல தலை வர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

கூடுதலாக, குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு ஆகியவை நாட்டின் செல்வத்தை சுரண்டுவதாகக் குற்றம் சாட்டப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடரத் தயாராகி வருகின்றன.

இந்த வழக்குகளில் போர் விமான பரிவர்த்தனைகள் மற்றும் சர்ச்சைக்குரிய பத்திர பரிவர்த்தனைகளில் முறைகேடுகள் அடங்கும் என அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது ஒரு முக்கிய அரசியல்வாதியின் மனைவி மீது நடத்தப்பட்ட விசாரணைகள் நடைமுறை குறைபாடுகள் காரணமாக சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டன.

இந்த விசாரணைகள் முறையாக முடிவடைந்தவுடன், அனைத்து சந்தேக நபர்களுக்கும் எதிராக சட்டம் உடனடியாகவும் முறையாகவும் செயல்படுத்தப் படும் என்று மூத்த அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இனப்பிரச்னையை...

இல்லை . சுற்றுலாப் பயணிகளின் வருகையை மட்டும் தான் பார்த்திருக்கிறார்கள்.

இலங்கை உலக நாடுகள் மற்றும் நாணய நிதியத்திடம் வாங்கிய கடனை கட்டுவதென்றால் உடனடி வழிமுறை கூட இல்லை. நெல் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கையின் கைத்தொழில் துறையும் எதிர்பார்த்த இலாபத்தை அடையவில்லை. இலங்கை அரசாங்கம் கிளீன் சிறிலங்கா போன்று புரையோடி போயுள்ள இனப்பிரச்னைக்கும் கிளீன் திட்டத்தை கொண்டு வருவார்களாக இருந்தால் உலகத்திலுள்ள தமிழர்களின் நிதியுடன் வடக்கு-கிழக்கில் புதிய அபிவிருத்தியை உருவாக்கத் தயார்.

ஆனால் இலங்கையின் பொருளாதாரத்திலும் ஒரு மாற்றத்தை கொண்டு வரும் இங்குள்ள பல தொழிற்சாலைகள் இன்னும் இயங்க முடியாதுள்ளது. இவற்றை இயக்குவதற்கான பண பலத்தை உலகத் தமிழர்கள் கொண்டுள்ளனர்.

பொலிஸ், காணி அதிகாரங்களை தந்து நாங்கள் சுயாட்சியாக வாழ வழிவிடவேண்டும். எப்பொழுதும் சமாதானமாக பேசுவதற்கு எங்களுடைய சமாதான கதவுகள் எப்பொழுதும் திறந்திருக்கும் - என்றார். (அ)

## மகிந்தவை...

முடக்கி, அரசியலில் இருந்து ஓய்வுபெற வைப்பதற்குரிய நடவடிக்கை இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. மஹிந்தவைக் கண்டு தற்போதைய அரசாங்கம் அஞ்சுகின்றது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு போதாது என அவரின் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்தவர்கள் சுட்டிக் காட்டி இருந்தனர். இந்நிலையிலும் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது. நாட்டை மீட்ட தலைவரை நாம் நிச்சயம் பாதுகாப்போம்.

புலிகளை ஒழித்த தலைவருக்கும், புலிகளுடன் பேச்சு நடத்தியவர்களுக்கும் ஒரே அளவான பாதுகாப்பை வழங்குவது நியாயமா? - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தமிழரசின் மீளெழுச்சிக்கு ஒற்றுமை மிகவும் அவசியம்

## கட்சியில் இளைஞர்களை இணையுமாறு சீ.வீ.கே. அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 02

"இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு செயற்படுவதன் ஊடாகவே அடுத்து வரும் தேர்தல்களில் தமிழரசுக் கட்சி மீளெழுச்சி பெறும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

நல்லூரில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்த மாவை சேனாதிராசா பதவி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்குக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவராக இருந்த என்னைப் பதில் தலைவராக எஞ்சிய காலத்துக்குக் கடமையாற்றுமாறு தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவினர் கூடி தெரிவு செய்திருக்கிறார்கள். கட்சியின் அடுத்த மாநாடு வரையில் இந்தப் பணி தொடரும். அதற்கு இடைப்பட்ட காலத்தில் உள்ளூராட்சி மற் றும் மாகாண சபை ஆகிய இரண்டு தேர்தல்கள் இடம் பெற இருப்பதால் கட்சியில் தொய்வில்லாத வகையில் செயல்பாடுகள் அமைய வேண்டி இருக்கின்றன. அதற்காகக் கட்சியின் செயல்பாடுகளை முழுவீச்சில் செயற்படுத்த வேண்டிய கடப்பாடுகள் எனக்கு இருக் கின்றன.

கடந்த வருடங்களில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் வேட்புமனுக்கள் கோரப்பட்டு தேர்தல் நடைபெறாத நிலையில் அந்த வேட்புமனுக்கள் இரத்தாகும் என்றால் புதிய வேட்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை இருக்கின்றது.

ஏற்கனவே கட்சியில் இருப்பவர்களுக்குத்தான் கட்சி வாய்ப்பளிக்கும் என்பதால் புதியவர்கள், இளையவர்கள் கட்சியில் இணைந்து அங்கத்துவமாக சேர்ந்து உள்ளூராட்சி சபைகளில் அரசியல் ரீதியாகப் பணியாற்றுவதற்குப் பின்னிற்கின்றார்கள் என்ற நிலை எமது கட்சியில் இருக்கின்றது.

ஆகவே, உண்மையாகச் சொன்னால் தேர்தல் முறையில் இருக்கக் கூடியவாறு இளையவர்கள், மகளிர்கள் எனப் போதியவர்கள் எங்கள் கட்சியில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

ஆனாலும், சில இடங்களில் அப்படியானவர்கள் இருந்தாலும் அனைத்து இடங்களிலும் பொருத்தமானவர்கள் இல்லாத நிலைமை உள்ளது.

ஆகவே, புதிய இளையவர்கள், மகளிர்கள் அரசியல் பயணத்துக்கு முன்வர வேண்டுமென நான் அழைப்பு விடுக்கிறேன் - என்றார். (அ)

# 20 இந்திய மீனவர் நாடு திரும்பினர்!

கொழும்பு, ஜன. 02

இலங்கை சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட 20 இந்திய மீனவர்களும் விமானம் மூலம் சென்னை வந்தடைந்ததாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஓராண்டுக்கு முன் இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் தமிழகத்தின் புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். இந்திய - இலங்கை அரசாங்க அதிகாரிகளின் பேச்சு வார்த்தைக்குப் பின்னர் 20 மீனவர்களும் விடுவிக்கப் பட்ட நிலையில், இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அதையடுத்து அவர்களுக்கு தற்காலிக குடியுரிமை சான்றிதழ் வழங்கப்பட்டு, விமானம் மூலமாக கொழும்பில் இருந்து சென்னை விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சென்னை விமான நிலையத்தை மீனவர்கள் சென்றடைந்ததும், அவர்களது குடியுரிமை சரிபார்ப்பு, இந்திய சுங்கச் சோதனை மற்றும் பிற சம்பிரதாயங்களுக்கு உட்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

பின்னர் அவர்களை மீன்வளத்துறை அதிகாரிகள் வரவேற்று, தனி வாகனங்களில் சொந்த ஊர்களுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்தனர்.

# வடக்கு மாகாணத்தின் முக்கிய சொத்து கல்வி

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 02

**வடக்கு மாகாணத்தின் முக்கிய சொத்து கல்வி. ஏந்தவொரு பிரதேசமும் அபிவிருத்தியடைவதற்கு கல்விதான் இன்றியமையாதது எனக் குறிப்பிட்ட வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கல்வியில்லாமல் எதுவும் செய்யமுடியாது - என்றார்.**



வடக்கு மாகாண சபையால் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் தேவையுடைய மாணவர்களுக்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று புதன்கிழமை காலை வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலர் பொ. வாகீசன் தலைமையில் இடம் பெற்றது.

சமூகசேவைகள் திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தை அடுத்த ஆண்டு இன்னமும் காத்திரமுள்ளதாக மாற்றுவோம் என அமைச்சின் செயலர் பொ.வாகீசன் தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன் தனது உரையில், வடக்கு மாகாணத்திலுள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கே இந்த நிதி உதவி வழங்கப்பட்டு வரும் நிலையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆனால் வெளி மாகாணங்களில் கல்வி பயிலும் மாணவர்களும் தங்களை இந்தத் திட்டத்தில் உள்ளீர்க்க கோரிக்கை விடுத்துள்ளனர் எனவும், எதிர்காலத்தில் இந்தத் திட்டத்தை மீளாய்வு செய்யவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா தனதுரையில், வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் யாழ். பல்கலைக் கழகத்தின் மாணவன் என்றும், அவர்கள் அரச சேவையில் காலடி எடுத்து வைத்த காலம் நெருப்பாற்றை நீந்திக் கடக்கவேண்டிய காலம் எனவும் குறிப்பிட்டதுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைமுறைப்படுத்தப்படும் நன்கொடைத் திட்டங்களைப் பார்த்து பலரும் வியப்பதாகவும் குறிப்பிட்டார். வவுனியாப் பல்கலைக்கழக துணைவேந்தர் சார்பில் கலந்துகொண்ட பீடாதிபதி தனது உரையில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் வடக்கு மாகாண சபையுடன் ஏற்கனவே இணைந்து செயற்படுவதைப்போல தமது பல்கலைக்கழகமும் எதிர்காலத்தில் இணைந்து செயற்படும் என்று குறிப்பிட்டார்.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில், யாழ்ப்பாண மாவட்டச் செயலராக தான் பணியாற்றிய காலத்தில் புலம்பெயர் தேசத்திலிருந்து பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன என்பதைக்குறிப்பிட்டார்.

தற்போது இங்குள்ள ஆலயங்களில் எப்படிப் பிளவுகள் இருக்கின்றனவோ அதைப்போல புலம்பெயர் தேசங்களிலும் பிளவுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி அதன் காரணமாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு கிடைக்கப்பெற்ற உதவிகள் சில இல்லாமல் போயுள்ளன எனவும் ஆளுநர் கவலை வெளியிட்டார்.

தமது அரச சேவையின் ஆரம்ப காலங்களில் அளவெட்டியிலிருந்து குறிகாட்டுவான் வரையில் துவிச்சக்கரவண்டியில் பயணித்து அந்த துவிச்சக்கரவண்டியையும் குமுதினிப் படகில் ஏற்றிச் சென்று நெடுந்தீவில் பணியாற்றியதை நினைவு கூர்ந்தார். அவ்வாறு பணியாற்றியமையால்தான் எதையும் செய்யக் கூடிய மனநிலை, எதையும் செய்யும் துணிவு வந்தது எனக் குறிப்பிட்ட ஆளுநர், உயிரைப் பணயம் வைத்து பணியாற்றியமையையும் அதன் ஊடாக மக்களுக்கு பல சேவைகள் செய்தமையையும் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்களத்தால் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 722 மாணவர்கள் இந்தத் திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்ட நிலையில் அவர்களில் நூறு பேருக்கு நேற்று சம்பிரதாயபூர்வமாக அவை வழங்கப்பட்டன. (அ-05)

# தமிழரசை முடக்க திரைமறைவில் சதி!

## மாவை குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 02

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிலர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை முடக்குவதற்குத் திரைமறைவில் சதி முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள் எனவும் அவர்களே எனது தலைவர் பதவியைப் பிடுங்குவதில் குறியாக இருந்தார்கள் எனவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும்,கட்சியின் தற்போதைய அரசியல் குழுத் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய நிலைமை தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

"குறுக்கு வழியில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் நுழைந்தவர்கள், தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கட்சி இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றார்கள். அவர்களின் சுயநல நடவடிக்கைகளால்தான் எமது கட்சி பலவீனமானது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை முடக்க வேண்டும் என்று தென்னிலங்கை விரும்பியது.

ஆனால், நானும் முன்னாள் தலைவர் சம்பந்தனும் தமிழரசுக் கட்சியைப் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பாதுகாத்தோம்.

இதெல்லாம் எமது கட்சியைத் தற்போது முடக்க முயலும் சூழ்ச்சிக்காரர்களுக்கு - மக்களால் நிராகரிக்கப் பட்டவர்களுக்கு நன்கு தெரியும்.

தமிழரசுக் கட்சிக்குள் வந்து அரசியல் முகவரி தேடிய இந்தச் சூழ்ச்சிக்காரர்கள், கட்சியை முடக்க முயல்வது அசிங்கமானது. அவர்கள் நன்றி மறந்தவர்கள். அவர்களின் எண்ணம் நிறைவேற நாம் ஒருபோதும் இடமளியோம்" எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# சமூக செயல்பாட்டாளர் நாமல் குமார கைது!

கொழும்பு, ஜன. 02

சமூக செயற்பாட்டாளர் நாமல் குமார கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பேராயர் கர்தினால் ரஞ்சித்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களில் ஒலிப்பதிவினை மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டுக்கு அமைவாக இந்த கைது இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு அண்மையில் கொழும்பு பேராயர் கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 02.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org